SRI C. CHIRANJEEVULU NAIDU : In addition to these slum-dwellers, we see a number of pavement dwellers who are a menace to the public in several aspects. What is the view of the Government in this regard? Do they propose to rehabilitate the large number of these pavement dwellers also ?

THE HON. SRI R. VENKATARAMAN : We have an estimate of the number of these dwellers on the pathways. It comes to about 6,000. We have rehabilitated 1,300 to 1,400 in the Vyasarpadi Slum Clearance Scheme. They have all been accommodated and those areas which have been cleared have now been made unfit for any other habitation. That is, the roads have been widened so that nobody can occupy the pavements. So, all steps that are necessary are being taken in this regard. The problem is being tackled with a great deal of interest.

திரு. வை. சங்கரன் : உதாரணமாக, ஒரு வீட்டுக்கு ஒரு செண்ட் இரண்டு செண்ட் என்று கொடுப்பதாக வைத்துக்கொண்டாலும் மறுபடியும் அவர்கள் அதை உள் வாடகைக்குக் கொடுத்து வேறு ஆட்களை வைத்து விட்டு பழையபடியே ஸ்லம்களாக மாறி விடாமல் இருக்க என்ன பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன.?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதில் சர்க்கார் நடவடிக்கை ஒன்றும் எடுக்க முடியாது. அவரவர்கள் தாங்கள் சுகாதாரமான வாழ்க்கை நடத்தவேண்டுமென்று விரும்பினால் தான் ஸ்லம் க்ளியரன்ஸோ அல்லது இம்ப்ரூவ்மெண்டோ செய்யமுடியுமே தவிர, ஓப்பன் டெவலப்ட் ப்ளாட்ஸ் கொடுத்த பிறகும் அவர்கள் ஸ்லம்களாக மாற்றிக்கொள்வார்களேயானால் அதைத் தடுப்பதற்கு சர்க்காரால் ஒன்றும் செய்ய முடியாது.

திரு. இராம. அரங்கண்ணல் : மயிலாப்பூர் தொகுதியில் முன்பே சர்க்கார் அறிவித்து இருக்கிற தகவல்படி 7 இடங்கள் கோயிலாருக்கு உள்ளன. மேற்படி கோயிலுக்குச் சொந்தமான இடங்களில் குடிசை வாழ்பவர்களுக்குக் கோவில் நிதியைக் கொண்டே வீடுகள் கட்டிக்கொடுப்பதான யோசனை இருப்பதாக முன்பு முதல் அமைச்சர் அவர்கள் ஒரு கருத்து வெளியிட்டிருக்கிறார்கள். அந்த யோசனை இப்போது எந்த நிலையில் உள்ளது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அது பற்றித் தனியான ஒரு கேள்வி போட்டால் அற நிலைய பாதுகாப்பு இலாகாவில் இருந்து தகவல் வாங்கிச் சமர்ப்பிக்க முடியும்.

Rural electrification

*138 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to set up pilot projects for intensifying rural electrification works through rural electricity co-operatives ; and

(*b*) if so, the details thereof ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) At the conference of the Chairmen of the State Electricity Boards held recently, it has been formulated that one rural electricity co-operative in the area of each State Electricity Board should be formed as a pilot project. This is under consideration.

1st March 1966]

திரு. வை. சங்கரன் : இதற்கு முன்னால் வேறு எந்த இடங்களி லாவது இது போன்ற ப்ராஜக்ட் நடைமுறையில் இருந்து அதை ப்ரீஸி டன்டாக வைத்து இதை ஆரம்பிக்க ஏதாவது உத்தேசம் இருக்கிறதா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: மஹாராஷ்டிராவில் 12, குஜராத் தில் 6, வங்காளத்தில் 2, அஸ்ஸாமில் 1, மத்திய பிரதேசத்தில் 1, மைசூரில் 1, உத்தர பிரதேசத்தில் 1.

புலவர் கா. கோவிந்தன் : மாநில மின்சாரக் கழகம் இப்போது நல்ல முறையில் கிராமங்களுக்கு மின்சார விஸ்தரிப்பு செய்து வருகிறது. அதைக் கூட்டுறவு இயக்கத்தின் மூலம் செய்வதில் அந்த அளவு நம்பிக்கை இல்லாத நிலை இருக்கிறது. ஆகவே, மாநில மின்சாரக் கழகத்திற்குள்ள பொறுப்பைக் கூட்டுறவு இயக்கத்திற்குக் கொடுக்காது இருப்பதற்கு அரசாங்கம் தக்க பாதுகாப்பு கொடுக்குமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அங்கத்தினர் அவர்களுக்கு கூட்டு றவு இயக்கத்தில் நம்பிக்கை இல்லை என்று சொன்னால் அது அவர் களுடைய கருத்து. அதைப் பற்றி நான் ஒன்றும் குறை சொல்லவில்லை. இப்போது ஒரு யோசனை நடந்து கொண்டிருக்கிறது. சென்னை ராஜ்யத் தைப் பொறுத்தவரையிலே இதற்கு அவசியம் இருக்காது என்று தான் நான் நினைக்கிறேன். காரணம், நாம் 85 சத வீத அளவிற்கு இன்று நம் ராஜ்யத்தில் உள்ள பகுதிகள் எல்லாவற்றிற்கும் மின்சார விஸ்தரிப்பு செய்து விட்டோம். எந்த எந்த ராஜ்யங்களில் மின்சார விஸ்தரிப்பு சரியான முறையில் நடைபெறவில்லையோ, அதற்கு வேண்டிய வசதிகள் இல்லையோ அவர்கள் இந்தவிதமான உபாயங்களைக் கடைப்பிடிக்கலாம் என்பது தான் அபிப்பிராயம். ஆனால் இதைப் பற்றி முடிவு எடுக்க வில்லை. ஆகவே தான் பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னேன்.

நாசரெத்தில் பாலிடெக்னிக்

*139 கேள்வி.—**திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், நாசரெத்தில் ஆரம்பிக்கப்பட்ட பாலிடெக்னிக் (Polytechnic) மூடப்பட்டது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதற்கான காரணம் என்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes.

(*b*) The authorities of the Church of South India decided to close down the Polytechnic.

திரு. எம். எஸ். செல்வராஜன் : இந்த பாலிடெக்னிக்குக்குக் கொடுக்கப்பட்ட நிலம் எவ்வளவு ? அந்த நிலத்தை தற்போது அரசாங் கமே எடுத்துக்கொண்டிருக்கிறதா? அல்லது ஸவுத் இந்தியா சர்ச் கவுன்சிலுக்கு விட்டு விட்டார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஒரு தனியார் பாலிடெக்னிக் வைக்கிறபோது அவர்கள் ஒரு ஒப்பந்தம் செய்து கொடுக்க வேண்டும். எந்தக் காரணத்திற்காக அவர்கள் இந்த பாலிடெக்னிக்கை மூடி விட்டா லும் அதனுடைய சொத்துக்கள் பூராவும் சர்க்காரையே சேர்ந்து விடும் என்ற நிபந்தனை இருக்கிறது. அந்த நிபந்தனை கடைப்பிடிக்கப்படுகிறது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. எம். எஸ். செல்வராஜன் : நான் அறிந்த மட்டில், அந்த நிலத்தை எல்லாம் சர்க்காரே எடுத்துக்கொண்டதாகத் தெரிகிறது. அப்படி யானால், அந்த நிலத்தைப் பயன்படுத்திக்கொண்டு சமீபத்தில் திருநெல் வேலி ஜில்லாவிற்கு என்று அனுமதிக்கப்பட்டிருக்கிற என்ஜினியரிங் கல்லூரியை அந்த இடத்திலேயே அமைக்க சர்க்கார் யோசிக்குமா?